(எட்டாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 2(4).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2018 ஒக்டோபர் 12 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2018 ஒக்டோபர் 25, வியாழக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

இரசாயன ஆயுதங்கள் சமவாயம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2018) — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகளை அறவிடுதல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்,— குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2018 செப்டெம்பர் 11 ஆம் திகதிய 2088/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2018 நவம்பர் 16, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

20/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) கண்டி மாவட்டத்திற்கு புதிதாக நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) கண்டி மாவட்டத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களை வலுவூட்டுவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

133/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் ஒவ்வொரு தேர்தல் ஆளுகைப் பிரதேசத்திலுமுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி தேசிய பாடசாலைகளின் பெயர்கள் யாவை;

(iii) மாத்தளை மாவட்டத்தில் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் தற்போதுள்ள தேசிய பாடசாலைகளை மேலும் முன்னேற்றுவதற்கும் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

198/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013 முதல் 2017 ஆம் ஆண்டு வரை பொலிஸ் திணைக்களத்தின் பயன்பாட்டுக்காக கண்ணீர் புகையினை கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்பட்ட பணத் தொகை ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப தனித் தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

256/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்ரகமுவ மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படும் வைத்தியசாலைகளினதும் சுதேச மருத்துவ நிலையங்களினதும் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை, பதவிப் பெயர்களின் அடிப்படையில் தனித் தனியாக யாதென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இந்த வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு மாகாண சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் எதிர்வரும் காலத்தில் இரத்தினபுரி மாவட்டத்தின் வைத்தியசாலை முறைமைகளை முன்னேற்றுவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

384/ '18

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டங்களில் வாழும் ஏறத்தாழ 08 இலட்சம் மக்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்தும் நோக்கத்தில் பெருந்தோட்ட வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று கடந்த அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கேற்ப 2014 ஆம் ஆண்டு நிறைவுபெறும் போது அவ்வாறு அரசிற்கு பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்ட பெருந்தோட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கை, வைத்தியசாலையின் பெயர் மற்றும் பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்ட காலகட்டம் யாதென்பதையும்;

(iii) தற்போது இக்கருத்திட்டம் நடைமுறையிலில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) இக்கருத்திட்டத்திற்காக அமைச்சினால் செலவிடப்பட்ட பணத்தொகை வருடாந்தம் எவ்வளவென்பதை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) பெருந்தோட்ட சுகாதார நிலைமையை மேம்படுத்துவதற்கு இக்கருத்திட்டம் பெரும் உந்துசக்தியாக இருந்ததால் அதனை துரிதமாக மீள ஆரம்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

394/ '18

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பயணிகள் போக்குவரத்து பேருந்துகளில் அதிவேக வீதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் இலங்கை போக்குவரத்து சபைக்கு வழங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இலங்கை போக்குவரத்து சபையிலிருந்து அரசு பெற்றுக்கொண்ட வருமானம் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவுகள் தனித் தனியாக யாதென்பதையும்;

(iv) 2014 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அதிவேக வீதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் மூலம் அரசு பெற்றுக்கொண்ட வருமானம் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவுகள் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்து சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கை ஒவ்வொரு தரத்திற்கும் ஏற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

441/ '18

கௌரவ ஜயந்த சமரவீர,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 மே 27 ஆம் திகதி ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தம் காரணமாக களுத்துறை மாவட்டத்தில் முழுமையாக, பகுதியளவில் மற்றும் சிறியளவில் சேதம் ஏற்பட்டுள்ள தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி தொழில்முயற்சி இடங்களின் எண்ணிக்கை, பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு அமைய தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி தொழில்முயற்சிகள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் மற்றும் சுயதொழில்வாய்ப்புக்கள் என்ற வகையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி தொழில்முயற்சிகள் விலங்கு வளர்ப்பு, தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் ஏனையவை என்ற வகையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அவ்வாறு வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவினால் அழிவடைந்த தொழில்முயற்சிகள் உரித்தான ஆட்களின் பெயர், முகவரி, சேததத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி, மேற்படி தொழில்முயற்சி அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவற்றை தனித்தனியே சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) களுத்துறை மாவட்டத்தில் அவ்வாறு சேதமடைந்த தொழில்முயற்சிகளுக்கு இன்றளவில் அரசு நட்டஈடு செலுத்தியுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், நட்டஈடு கிடைத்த தொழில்முயற்சியாளரின் பெயர், முகவரி தொழில்முயற்சி மற்றும் செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை தனித்தனியே யாது என்பதையும்;

(iv) களுத்துறை மாவட்டத்தில் தற்போது நட்டஈடு செலுத்தப்பட்டுள்ள தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை மற்றும் மொத்த நட்டஈட்டுத் தொகை யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

467/ ’18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள க.பொ.த. (உ./த.) தொழில்நுட்பப் பிரிவுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது பதுளை மாவட்டத்தில் உள்ள தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இவர்களின் பெயர்கள் மற்றும் தற்போது சேவையாற்றுகின்ற பாடசாலைகள் யாவை என்பதையும்;

(v) எதிர்வரும் காலத்தில் பதுளை மாவட்டத்தில் மாணவர்களுக்கு மத்தியில் தொழில்நுட்பப் பாடத்தை பிரபல்யப்படுத்துவதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2018 நவம்பர் 17, சனிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

57/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் 208 ஆம் இலக்க முன்மொழிவின்படி, பாதுகாப்பு முதலீட்டுக் கணக்கு முறை இரத்துச் செய்யப்பட்டதா;

(ii) ஆமெனில், அத் திகதி யாது;

(iii) மேற்படி முன்மொழிவின் மூலம் இலங்கைக்கு வெளியே தமது நிதியை வைத்திருக்கும் இலங்கையர்களுக்கு அந்நிதியை தாய் நாட்டுக்கு எடுத்துவரும் படி செய்யப்பட்ட வேண்டுகோளுக்கு இதுவரை கிடைத்துள்ள பிரதிபலிப்புகள் யாவை;

(iv) மேற்படி வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் படி, வங்கிக் கணக்கு முறையினூடாக வெளிநாட்டில் வைத்திருக்கும் பணத்தை இந்நாட்டிற்கு அனுப்பும் எந்தவொரு ஆளுக்கும் எதிராக அரசாங்கத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை என திட்டவட்டமாகக் குறிப்பிடுவதற்கு நிதி அமைச்சர் சட்ட ரீதியான அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட முறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

142/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திரு. எஸ்.சீ.பீ. செனவிரத்ன (பெயர்வழிப் பதிவுக்கோப்பு இலக்கம் 3/2/3/3/1/18/-தொகுதி 11) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சேவையிலிருந்து நீங்கிய திகதி யாது;

(ii) தொழிலிலிருந்து நீங்கும்போது அவர் வகித்த பதவி யாது;

(iii) திரு. செனவிரத்ன தனது உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளாரா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட பழிவாங்கல் தொடர்பிலான முறைப்பாடு, மேற்படி முறைப்பாடு தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அவதானிப்புகள் மற்றும் வழங்கப்பட்ட கட்டளை ஆகியவற்றை சபையில் சமர்ப்பிப்பாரா;

(ii) இவருக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் மற்றும் மேற்படி நிவாரணங்கள் கிடைக்கப்பெற்ற திகதி யாது;

(iii) இவருக்கு நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

276/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மின்சார முறைமையை கூர்திறன்கொண்ட முறைமையாக (Smart Grid) மாற்றுதல் சம்பந்தமான அரசின் கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) கூர்திறன்கொண்ட முறைமைக்கான வழிகாட்டல் திட்டத்தை (Road Map to Smart Grid) தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தின் வெற்றிகரத்தன்மை சம்பந்தமாக திருப்தியடைகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

501/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பண்டாரவளை உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் பதுளை மாவட்ட மக்களுக்கு, உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமையை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் காரணமாக பயிர்ச்செய்கைச் சேதம் ஏற்பட்டுள்ள மக்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1110/ '18

கௌரவ காமினி லொக்குகே,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1978.12.01 ஆம் திகதியன்று இலங்கைப் போக்குவரத்து சபையில் சேவைக்கு இணைந்த திரு கே. விமலசேன 2016.11.24 ஆம் திகதியன்று சேவையிலிருந்து ஓய்வு பெற்றார் என்பதையும்;

(ii) இவருக்கு உரித்தான பணிக்கொடைத் தொகை மற்றும் மிகை விதிப்புக் கட்டணத்தின் கூட்டுத்தொகை ரூ 2,047,425.25 என்பதையும்;

(iii) அத் தொகை 2016.12.24 ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்தப்பட்டிருக்க வேண்டுமென்பதையும்;

(iv) திரு. விமலசேன புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால் இவர் கடும் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார் என்பதையும்;

(v) இதுவரை திரு. விமலசேனக்குரிய பணிக்கொடை மற்றும் மிகை விதிப்புக் கூட்டுத்தொகை செலுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. விமலசேனவுக்கு உரித்தான பணிக் கொடை மற்றும் மிகை விதிப்புக் கூட்டுத்தொகை செலுத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1113/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கும்,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்துக்கு சொந்தமான இப்பலோகம பிரதேச செயலகப் பிரிவுக்குரிய பூகொல்லாகம, பலும்கல பிரதேசத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தொல்லியல் காணியொன்று பொறித்தொகுதிகளை கொண்டு அழிக்கப்படுகிறதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இக்காணியில் புராதன அழிவுச் சின்னங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iv) மேற்படி அழிவுச் சின்னங்கள் எந்த காலத்துக்குரியதென ஊகிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேற்படி காணியின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நடவடிக்கைக்கு அனுமதி அளித்த உத்தியோகத்தர் யார் என்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைக்கு தொல்லியல் திணைக்களத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) பொறித் தொகுதிகளை பயன்படுத்தி இத் தொல்லியல் காணியை அழிப்பதற்கு பங்களிப்பு செய்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1125/ '18

கௌரவ விமல் வீரவன்ச,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எதிரிசிங்க டிரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட் (ETI) என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற நிதிக் கம்பனி இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டு, அதன் கண்காணிப்பின் கீழ் இயங்கி வந்த நிதிக் கம்பனியா என்பதையும்;

(ii) வைப்புச் செய்யப்பட்ட பணம் மேற்படி நிதிக் கம்பனியினால் முறையாக திருப்பிச் செலுத்தப்படாமை காரணமாக வைப்பாளர்கள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பு இல்லாத நிதி நிறுவனங்களில் பணத்தை வைப்புச் செய்ய வேண்டாமென்று அரசாங்கம் வழங்கியுள்ள அறிவுரைக்கு அமையச் செயற்பட்டு, இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழ் காணப்பட்ட நிறுவனமொன்றில் பணத்தை வைப்புச் செய்த, ETI வைப்பாளர்களின் பணத்தை மீளப் பெற்றுக் கொடுப்பதற்கு தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

(iv) இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழ் காணப்படுகின்ற ஏனைய நிதி நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு இவ்வாறான சிக்கல்கள் ஏற்படுவதை தடுப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1356/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— வீடமைப்பு, நிர்மாணத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் சிறுநீரக நோயாளர்கள் உள்ள குடும்பங்களின் வீடுகளை திருத்துவதற்கு உதவித் தொகை வழங்கப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அனுகூலத்தை பெற விண்ணப்பிப்பதற்கு தேவையான தகைமைகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களும் யாவை என்பதையும்;

(iii) அதன் கீழ் வீடொன்றை திருத்துவதற்கு வழங்கப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் மேற்படி வீடமைப்பு உதவித் தொகையை பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள ஆட்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பதாரிகளுள் வீடமைப்பு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கமைய எவ்வளவு என்பதையும்;

(iii) தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் அத் தொகை வழங்கப்படுமா என்பதையும்;

(iv) திருத்துமளவுக்குக் கூட வீடு இல்லாத, குடிசைகளில் வசிக்கின்ற சிறுநீரக நோயாளர்களும் காணப்படுவதால், இவர்களுக்கு வீடொன்றை அமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2018 நவம்பர் 19, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

70/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிதி அமைச்சரின் 100 நாள் புரட்சி பற்றிய கூற்றில் குறிப்பிடப்பட்டவாறு கர்ப்பிணி தாய்மாருக்கு ரூபா 20,000/- கொடுப்பனவு வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மேற்படி நலனை பெற்றுக்கொண்ட கர்ப்பிணி தாய்மாரின் பெயர் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கர்ப்பிணி தாய்மாருக்கு ரூபா 20,000/- வீதம் வழங்குவதற்கு அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட மொத்த செலவினம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட கூற்றின் 7.29 இல் காட்டப்பட்டுள்ளவாறு வெளியிடப்பட்ட அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

187/ '18

கௌரவ (டாகடர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரமதம அமைச்சரும் தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எஸ்பெஸ்ரோஸ் பாவனையை தடைசெய்ய அரசாங்கம் முடிவுசெய்த திகதி யாது என்பதையும்;

(ii) அதில் தாக்கம் செலுத்திய விடயங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தடைக்கென அரசாங்கம் அடிப்படையாகக்கொண்ட நிபுணர் குழு அல்லது நிபுணத்துவ அறிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அரசாங்கம் மேற்படி தடையை நீக்க முடிவுசெய்த திகதி யாது என்பதையும்;

(v) அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(vi) எஸ்பெஸ்ரோஸ் பாவனைக்கு உகந்ததென மீண்டும் சிபாரிசு செய்த வல்லுநர்கள் அல்லது நிபுணர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

277/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 10 மில்லியன் LED மின்குமிழ்களை வாடிக்கையாளர்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டத்திற்கு செலவான பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட பணத் தொகையை மின் வாடிக்கையாளர்களிடமிருந்து மீளஅறவிட்டுக் கொள்வற்கு நடவடிக்கை மேற்கொள்வது அநீதியானது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தை வழிப்படுத்திய நிறுவனம் யாது என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டம் தோல்வியடைந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

393/ '18

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் மாகாண அபிவிருத்திக்காக மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள புதிய அமைச்சுப் பதவிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி அமைச்சுக்கள் வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி அமைச்சுக்களுக்கு 2017 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டுத் தொகை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சினால் கருத்திட்ட அபிவிருத்திக்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததா;

(ii) ஆமெனில், மேற்படி நிதி ஏற்பாட்டுத் தொகை எவ்வளவு;

(iii) மேற்படி கருத்திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(இ) இன்றேல், ஏன்?

479/ '18

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண,— சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையினுள் ஏற்றுமதிக்கான விவசாயப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற அளவு ஏக்கர்களில் யாது என்பதையும்;

(ii) ஏற்றுமதி செய்யப்படுகின்ற பயிர்செய்கை வகைகள் (மரக்கறி/பழம்) யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஏற்றுமதிகளின் மூலம் நாட்டுக்கு கிடைக்கின்ற வருடாந்த அந்நியச் செலாவணியின் அளவு ஒவ்வொரு பயிர்ச்செய்கையின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி, ஏற்றுமதி பயிர்ச்செய்கை வகைகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

490/ '18

கௌரவ விஜித ஹேரத்,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட இலங்கை சதொச கம்பனியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம் பணிப்பாளர் சபையில் தொழிற்பாட்டுப் பணிப்பாளர் ஒருவர் உள்ளடங்குகின்றாரா என்பதையும்;

(ii) அக்கம்பனிக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் தொழிற்பாட்டுப் பணிப்பாளர் பதவியொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) 2010.01.10 ஆம் திகதி தொடக்கம் 2015.01.10 ஆம் திகதி வரை மேற்படி கம்பனியின் தொழிற்பாட்டுப் பணிப்பாளராக ஒருவர் பணியாற்றியுள்ளாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட இலங்கை சதொச கம்பனி தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட அதன் பங்குதாரர்களின் பெயர்கள் யாவையெனவும்;

(ii) அக்கம்பனியின் ஆரம்பம் தொடக்கம் 2015.01.10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பொதுத் திறைசேரியின் செயலாளரைப் பிரதிநிதித்துவம் செய்து பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களாகப் பணியாற்றிய உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

604/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனாத்தவில்லுவ புபுதுகம மீனவக் கிராமத்திலிருந்து றெட்பானா மீனவக் கிராமம் வரை "இபெரணி அம்பலம்" கிராமிய வீதி என்ற பெயரில் வீதியொன்று உள்ளது என்பதையும்;

(ii) அந்த வீதி இன்றளவில் பாரியளவில் சேதமடைந்து காணப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி மீனவக் கிராமத்தில் வாழும் மக்களின் வசதி கருதி குறித்த வீதியை அபிவிருத்தி செய்ய அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

756/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் "லுணுகல பேசம்வல" எனும் பெயரில் சுற்றுலாத் துறையின் கவனத்தை ஈட்டிக்கொண்டுள்ள பிரதேசமொன்று இருக்கின்றதென்பதையும்;

(ii) மேற்படி இடமும் அவ்விடத்தைச் சுற்றி அமைந்துள்ள பிரதேசமும் பாரிய சூழல் மாசடைதலுக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி இடத்தில் நடைபெறும் சுற்றாடல் மாசடைதலை குறைப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2018 நவம்பர் 21, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

71/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிதி அமைச்சரினால் 100 நாள் புரட்சி பற்றிய பிரகடனத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டவாறு விவசாயிகளால் வர்த்தக வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியுள்ள ரூபா 100,000/- வரையிலான கடன் மூலதனத்திலிருந்து 50% வீதம் வெட்டப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) விவசாயக் கடன்கள் வெட்டிவிடப்பட்டதன் விளைவாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினச் சுமையின் அளவு யாதென்பதையும்;

(iii) கடன் வெட்டிவிடப்பட்ட விவசாயிகளின் பெயர்ப் பட்டியல்களையும் மேற்படி ஒவ்வொரு விவசாயினது பெயருக்கு முன்னாலும் வெட்டிவிடப்பட்ட கடனின் தொகை குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஆவணத்தையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) விவசாயிகளின் வெட்டிவிடப்பட்ட கடன் சார்பாக வர்த்தக வங்கிகளுக்கு அரசாங்கத்தினால் இதுவரை செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

278/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்சமயம் இரத்தினபுரி மாவட்டத்தில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மாவட்டம் முழுவதும் டெங்கு நோய் அபாயம் நிலவுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

424/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 ஆம் ஆண்டு பலாகல பிரதேச செயலாளர் பிரிவில், பலாகல-நேகம்பஹ வீதியில் ஆரம்பிக்கப்பட்ட "விஜயகம" படைவீரர் கிராமம் 2013 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பொதுமக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கிராமத்தில் காட்டு யானைகள் அடிக்கடி நடமாடுவதன் காரணமாக கிராமத்தில் வசிப்பவர்களின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வது கூட மிகவும் அபாயகரமான நிலையில் காணப்படுகின்றது என்பதையும்;

(iii) மேற்படி கிராமத்தைச் சுற்றி யானை வேலியொன்றை நிர்மாணிக்க பிரேரிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை அது மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கிராமவாசிகளின் பாதுகாப்புக்காக துரிதமாக யானை வேலியொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

757/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டத்தின் மூலம் நீர் விநியோகிக்கப்படுகின்ற பதுளை மாவட்டத்திலுள்ள கிராமங்களின் பெயர்கள் பிரதேச செயலாளர் பிரிவுகளின் பிரகாரம் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காரணமாக பதுளை மாவட்டத்தில் பயிர்ச் செய்கைச் சேதங்கள் மற்றும் ஏனைய சேதங்களுக்கு உள்ளான கிராமங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1002/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மாத்தறை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1112/ ' 18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இலங்கைக்கு பசுமாடுகளை இறக்குமதி செய்கையில் ஒரு பசுமாட்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்படும் பசுமாடுகளை இறக்குமதி செய்கையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட பசுமாடுகளில் பயனடைய முடியாத மற்றும் மரணித்துள்ள பசுமாடுகளின் எண்ணிக்கை யாது;

(iv) இறக்குமதி செய்யப்பட்டுள்ள பசுமாடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(v) தனிப்பட்ட தொழில்முயற்சியாளர்களுக்கு விற்பனை செய்கையில் ஒரு பசு மாட்டுக்காக அறவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(vi) பசுமாடுகளை வழங்குவதற்கான தனிப்பட்ட தொழில்முயற்சியாளர்களை தெரிவு செய்கையில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ள அளவுகோல்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1141/ ' 18

கௌரவ முஹம்மது நசீர்,— மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயங்கரவாத வன்முறையோ அல்லது இனப்பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்துள்ள மற்றும் பாதிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு அரசாங்கத்தின் புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்றும் வேலைத்திட்டங்களின் கீழ் வழங்கப்படுகின்ற நிவாரணங்கள் யாவையென்பதையும்;

(ii) அதற்கமைய, 2009 ஆம் ஆண்டு முதல் இது வரை அவ்வாறு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட வாரியாகவும் பிரதேச செயலக வாரியாகவும் தனித்தனியாக குறிப்பிடுவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1357/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்துக்கு உரித்தான குறைந்தளவான வசதிகளைக் கொண்ட கஷ்டப் பிரதேசமான பதவி ஸ்ரீ புர பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள பாடசாலைகளில், மஹிந்தோதய ஆய்வுகூடமொன்று காணப்பட்ட ஒரேயொரு பாடசாலை திருகோணமலை/வடக்கு வலத்தியத்தின் பதவி பளுகஹவங்குவ மகா வித்தியாலயம் என்பதையும்;

(ii) மேற்படி கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மஹிந்தோதய ஆய்வுகூடம் 2014.11.08 ஆம் திகதி ஏற்பட்ட திடீர் தீப்பற்றலினால் அழிவடைந்துள்ளது என்பதையும்;

(iii) 2017.09.14 ஆம் திகதி கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இதன் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ரூ. 5.4 மில்லியன் பணத்தொகையை ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவித்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆய்வுகூடம் தீக்கிரையாகி தற்போது சுமார் 3 1/2 வருடங்கள் கடந்துள்ள போதிலும் நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாமற் போனமைக்கான காரணங்கள் யாவை;

(ii) புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளபோதிலும், இதுவரையில் அப்பணிகள் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் யாது;

(iii) மேற்படி (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்கு என்ன நடந்துள்ளது என்பதையும்;

(iv) நவீனமயப்படுத்தல் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2018 நவம்பர் 23, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

72/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 294 மற்றும் 295 என்பவற்றின் பிரகாரம் கொழும்பு பங்குச் சந்தையில் டொலர் பட்டியலிடப்படுவதற்காக வெளிநாட்டுக் கம்பனிகளை ஊக்குவிப்பதன் பொருட்டு பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) முன்மொழிவு இலக்கம் 295 இன் பிரகாரம் கொழும்பு பங்குச் சந்தையின் மூலதனமாக்கம் ரூபா 28 பில்லியன் தொடக்கம் ரூபா 50 பில்லியன் வரை உயர்த்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) பிரதம அமைச்சர் பல தடவைகளில் குறிப்பிட்டுள்ளவாறு "மூலதன இலாப வரியை" அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றதா என்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட உயர் அனுகூல வரி பங்குச் சந்தை அபிவிருத்திக்கு பாரிய தடையாக அமைந்தது என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(v) கடந்த காலத்துக்கு ஏற்புடையவாறு வரி விதிப்பதற்கு கருதியுள்ளாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

279/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெல்மடுல்ல தேர்தல் தொகுதியில், தொம்பகஸ்வத்த என்ற பின்தங்கிய கிராமத்தில் பெரும் குடிநீர் பிரச்சினை காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி மக்களுக்கு குடிநீரைப் பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

548/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 8 வருடங்களுக்கும் அதிகமான காலம் பணியாற்றியுள்ள உப பொலிஸ் பரிசோதகர்களுக்கு பொலீஸ் பரிசோதகர் பதவி வழங்கப்படுவதாக விடயத்துக்குப் பொறுப்பான முன்னாள் அமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார் என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அப்பதவி உயர்வுகள் இதுவரை வழங்கப்படாதமையின் காரணமாக மேற்படி உத்தியோகத்தர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) எனவே வாக்குறுதியளிக்கப்பட்டவாறு அப்பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அப்பதவி உயர்வுகள் வலுவுக்கு வரும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

758/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் தொழிற்படுகின்ற பெருந்தோட்டக் கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அக்கம்பனிகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு கம்பனியும் கொண்டுள்ள மொத்த நிலப்பரப்பு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) ஒவ்வொரு கம்பனியிலும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை, பதவிகளின் பிரகாரம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) பெருந்தோட்டத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக பெருந்தோட்டக் கம்பனிகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

956/ '18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூரிய மின்வலு உற்பத்திக்கு அரசாங்கத்தினால் சலுகை கடன் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு செலுத்த வேண்டிய வட்டி வீதம் எவ்வளவென்பதையும்;

(iii) இந்த வேலைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வங்கியினாலும் வாடிக்கையாளர் களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை மற்றும் அக் கடன் தொகையின் முழுமொத்தம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1326/ '18

கௌரவ சிசிர ஜயகொடி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு உயிரியல் பாடத் துறையில் க.பொ.த.(உயர் தரம்) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) ஒரு வருட காலம் கடந்துள்ளபோதிலும் இதுவரை 5 அலகுகளைக் கொண்ட பாடத்திட்டம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) அவைகூட ஆங்கில மொழியில் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) புதிய பாடத்திட்டத்திற்காக நடைமுறைப் பரிசோதனைகள் மற்றும் ஆசிரியர் கையேடுகள் வழங்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்போது ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பயிற்சி மற்றும் புதிய பாடத்திட்டம் பற்றிய விழிப்பூட்டல் வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) இன்றேல், அது ஏன் என்பதையும்;

(iii) முழுப் பாடத்திட்டத்தையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் என்?

1329/ '18

கௌரவ எஸ். சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் தமிழ்ச் சோலை என்ற பெயரில் பாடசாலையொன்று இயங்கியதென்பதையும்;

(ii) ஆமெனில், அப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் இறுதியாக தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கும் க.பொ.த.(சா/த) பரீட்சைக்கும் தோற்றி பெறுபேறுகள் வெளியிடப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) (i) தற்பொழுது இப்பாடசாலை அழைக்கப்படும் பெயர் யாதென்பதையும்;

(ii) இப்பாடசாலைக்கு யாரினால் பெயரிடப்பட்டது என்பதையும்;

(iii) அவ்வாறு பெயர் மாற்றப்பட்ட தினம் யாதென்பதையும்;

(iv) பாடசாலையின் பெயரினை மாற்றுவதன் மூலம் இப்பாடசாலையின் ஸ்தாபகர் அல்லது நிறுவுனர் என்ற அந்தஸ்த்தினை வேறு யாரும் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1344/ ’18

கௌரவ நிஹால் கலப்பத்தி,— நிதி வெகுசன ஊடகத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சரவைத் தீர்மானத்தின்படி உற்பத்தி வரிச் சட்டத்தின் கீழ் கடமையாற்றுவதற்காக மது வரிப் பரிசோதகர் பதவிக்கு மேலதிகமாக உற்பத்தி வரிப் பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்பட்ட மது வரிப் பரிசோதகர்களின் பதவிப் பெயர் உற்பத்தி வரிப் பரிசோதகர் என மாற்றப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) உற்பத்தி வரிப் பரிசோதகர்களின் சேவைப் பிரச்சினை தொடர்பாக 1995.09.19 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சரத் ரணவக்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளுக்கு வழங்கிய பதில்களை நிராகரிக்கின்றாரா என்பதையும்;

(iii) 231/98 ஆம் இலக்க உயர் நீதிமன்றத்தின் வழக்கு இணக்கப்பாட்டுக்கு வந்ததன் பின்னர் இந்த உத்தியோகத்தர்களை சுங்கத்திணைக்களத்தின் உற்பத்தி வரிப் பிரிவுக்கு உள்ளீர்க்கப் படுவதற்காக வழங்கப்பட்ட கடிதத்தின் ஏழாவது பந்திக்கமைய மது வரி மேற்பார்வையாளர் பதவியின் நியமன நிபந்தனைகள் மற்றும் மது வரி பரிசோதகர் தரத்தின் (உற்பத்தி பரிசோதகர் தரத்தின்) நிபந்தனைகள் அதேவாறு நடமுறையில் இருப்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) புதிய பதவியொன்றுக்கு நியமிக்காமல் அரச விதி முறைகளுக்கமைய ஓர் திணைக்களத்திலிருந்து மற்றுமோர் திணைக்களத்துக்கு உள்ளீர்த்தல் மாத்திரம் செய்யப்பட்டிருப்பதாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு செய்துள்ள சிபாரிசினை ஏற்றுக்கொள்வார என்பதையும்;

அவர் இச் சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல் ஏன்?

# 2018 நவம்பர் 24, சனிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

73/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு இல. 240 மூலம் கட்டட மற்றும் நிர்மாணத்துறையில் ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 500 மில்லியன் எவ்வாறு உபயோகிக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்கூறிய வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுக்கமைய மூன்று மாதங்களுக்கு இளைஞர்கள் 7500 பேர் வீதம் வருடமொன்றுக்கு 30,000 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கும் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) முப்பதாயிரம் வரையிலான பெருமளவு இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் யாவை என்பதையும் அந்த ஒவ்வொரு நிறுவனத்துக்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

150/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "விசல் தம்புல்ல" நீர் விநியோகத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் நிறைவுசெய்யப்பட்ட திகதிகள் யாவை;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(iii) அதன் கீழ் வழங்கப்பட்டுள்ள நீர் இணைப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) மேற்படி நீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(v) நீர் வசதியீனங்களை எதிர்நோக்குகின்ற மாத்தளை மாவட்டத்தின் ஏனைய மக்களுக்கும் நீர் இணைப்புகளை வழங்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

188/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,--- பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை இராணுவத்தில், இலங்கைக் கடற்படையில் மற்றும் இலங்கை விமானப் படையில் பணியாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் மற்றும் இவர்களின் இலங்கை மருத்துவ சங்கப் பதிவு இலக்கங்கள் ஒவ்வொரு படைகளுக்கும் ஏற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

280/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொடக்கவெல நகர விளையாட்டு மைதானம் உரித்தாகின்ற அரச நிறுவனம் யாது என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டு மைதானத்தின் பரப்பளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானமானது பல்வேறுபட்ட விளையாட்டுப் போட்டிகளை, மாகாண / தேசிய மட்டத்தில் நடத்துவதற்குத் தேவையான இடவசதியைக் கொண்டுள்ளது என்பதையும்;

(ii) கொடக்கவெல பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள்ளும் ரக்வான தேர்தல் தொகுதியினுள்ளும் அமைந்துள்ள 400 மீற்றர் ஓடு பாதையை அமைக்கக் கூடிய ஒரேயொரு விளையாட்டு மைதானம் இது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இந்த விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்புடைய மதிப்பீடுகள் மற்றும் திட்டத்துடன் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட போதிலும், இதுவரையில் உரிய நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இப்பிரச்சினையை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

452/ '18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரின் பிரத்தியேக பதவியணிக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வோர் உத்தியோத்தரதும் பெயர், பதவி, ஒதுக்கப்பட்டுள்ள வாகனத்தின் வகை, பதிவிலக்கம் மற்றும் அவ்விதம் ஒதுக்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது யார் என்பதை வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

759/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பகிரங்க அரங்காட்டுகைச் சபையிலிருந்த அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் சேவைக் கால எல்லைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு காலப்பகுதியிலும் காட்சிப்படுத்தும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட சிங்களத் திரைப்படங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு காலப்பகுதியிலும் தணிக்கைக்கு உள்ளான சிங்களத் திரைப்படங்கள் மற்றும் அவற்றின் இயக்குநர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) குறிப்பிட்ட திரைப்படங்களைத் தணிக்கை செய்யும் பொருட்டு பகிரங்க அரங்காட்டுகைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் தணிக்கைகளற்ற தரமான சிங்களத் திரைப்படக் கலையை உருவாக்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

967/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது செயலிழந்த நிலைமைக்கு மாறியுள்ள இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்தின் "ரஜரட்ட சேவையை" செயற்படும் நிலைமைக்கு மாற்றுவதற்கு கருதுகின்றாரா;

(ii) ஆமெனில், இதனை மேற்கொள்ளும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1003/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பொலன்னறுவை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியவள ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2018 நவம்பர் 26, திங்கட்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

281/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டில் ஆரம்பப் பட்டப் படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பை கற்பதற்காக இலங்கையின் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) ஆரம்பப் பட்டப் படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பை கற்பதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி மாணவர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பல்கலைக்கழம் மற்றும் பட்டப் படிப்பிற்கு ஏற்ப தனித்தனியே யாதென்பதையும்;

(iii) 2017 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப் பட்டமையால் கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(iv) இலங்கையின் பல்கலைக்கழகங்களுக்கு மேலும் கூடுதலான வெளிநாட்டு மாணவர்களை அனுமதிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

549/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில்,

(i) இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து ஈட்டிக்கொள்ளப்பட்டு நாட்டிலிருந்து வெளியில் கொண்டுசெல்லப்பட்டுள்ள இலாபத்தின் அளவானது ஐக்கிய அமெரிக்க டொலர்களில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அவ்வாறு பணம் வெளியில் கொண்டு செல்லப்பட்டதன் காணரமாக ரூபாயின் பெறுமதி மீது ஏற்பட்டுள்ள தாக்கம் எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு முதலீட்டின் மூலமும் இலங்கைக்கு தொழில் ரீதியாக கிடைக்கப்பெற்ற அனுகூலம் மற்றும் வேறு அனுகூலங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

760/ ' 18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகியங்கணை பொதுக்கூட்ட மண்டபம் நிறுவப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) தற்போது அந்த பொதுக்கூட்ட மண்டபத்தில் பல குறைபாடுகள் இருப்பதனை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்தக் குறைபாடுகள் யாவை என்பதையும்;

(iv) அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1118/ '18

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— உயர் கல்வி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொல்பொருளியல் திணைக்களத்தினால் நிருவகிக்கக்பபடும் தொல்பொருளியல் நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அந்த இடங்களின் பெயர்களை ஒவ்வொரு மாவட்டங்களின் படி குறிப்பிட முடியுமா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அந்த இடங்களுக்கு 2015 தொடக்கம் சேர்த்துக்கொள்ளப்பட்ட,

(i) நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) அமைய ஊழியர்களின் எண்ணிக்கை;

(iii) ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களின் எண்ணிக்கை;

(iv) அமைய ஊழியர்களிலிருந்து நிரந்தர சேவைக்கு உள்வாங்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை;

(v) ஒப்பந்த அடிப்படையிலிருந்த ஊழியர்களில் நிரந்தர சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை;

என்பவற்றை ஒவ்வொரு மாவட்டங்களுக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இந்த ஆட்சேர்ப்புக்கள் அரசின் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) தற்போதுள்ள ஊழியர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டங்களின் படி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல் ஏன்?

1124/ '18

கௌரவ கனக ஹேரத்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது வீட்டுத் தேவைப்பாடு உள்ளவர்களாக இருந்தும், வீடற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கடன் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) 2018 ஆம் ஆண்டில் வீடமைப்புக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி (i), (ii) மற்றும் (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த வீடமைப்புக் கடன் வழங்குவதற்கு தகுதிவாய்ந்தவர்களை தெரிவு செய்துகொள்ளும் முறையியல் யாது என்பதையும்;

(ii) இது தொடர்பிலான அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தெரிவு செய்துகொள்ளும் முறையியல் ஊடாக வீடமைப்புத் தேவை கடுமையாக காணப்படுகின்ற அநாதரவான குடும்பங்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1153/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கடற்றொழில் மற்றும் நீரகவளமூல அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவதற்காக தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) கால்நடை மேம்பாட்டில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் கடமைகளை மேற்கொள்ளும் போது பல்வேறு தடைகளை எதிர்நோக்குகின்றார்கள் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) கண்டி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1156/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 3-4 மாத காலமாக புத்தளம் மாவட்டம் கடும் வறட்சியை எதிர்நோக்கியதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வறட்சியின் காரணமாக புத்தளம் மாவட்ட தென்னைச் செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iii) வறட்சியினால் பாதிக்கப்பட்ட புத்தளம் மாவட்ட தெங்குச் செய்கையாளர் களுக்கு ஏதேனும் நிவாரணம் அல்லது உதவிகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1401/ '18

கௌரவ மொஹம்மது நசீர்,— அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும், ஒழுங்கும் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா பொலிஸ் நிலையத்தின் 248/177/MOIB ஆம் இலக்க மற்றும் 2017.02.13 ஆம் திகதிய முறைப்பாடு தொடர்பிலான சந்தேக நபருடன், EP-JA-7555 ஆம் இலக்க Toyota Noah வகையிலான மோட்டார் வாகனம், Samsung வகையிலான இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், Nokia வகையிலான ஒரு கையடக்கத் தொலைபேசி, தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிபத்திரங்கள் சில மற்றும் பணம் அடங்கிய பயணப் பொதியொன்று சிவில் பிரசைகள் சிலரினால் 2017.05.01 ஆம் திகதி களுத்துறை மாவட்ட குற்றவியல் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக மேற்படி சந்தேக நபர் 2017.05.01 ஆம் திகதி முதல் 2017.05.06 ஆம் திகதி வரை பாணந்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் என்பதையும்;

(iii) மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணை நடாத்துமாறு அப்போதைய சட்டமும், ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் MLO/MO/OUT/147/17 ஆம் இலக்க 2017.08.29 ஆம் திகதிய கடிதம் மூலம் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய முன்னேற்றம் யாது என்பதையும்;

(ii) பாதிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டாளர்களான தரப்பினருக்கு நியாயம் வழங்குவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2018 நவம்பர் 27, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

74/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 243 இன் படி, சுற்றுலாக் கைத்தொழில் துறை தொடர்பான பயிற்சிப் பாடநெறிகளுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 100 மில்லியன் எவ்வாறு உபயோகிக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்கூறிய முன்மொழிவில் குறிப்பிடப்பட்டவாறு காலாண்டு ஒன்றுக்கு 3000 பேர் வீதம் வருடமொன்றுக்கு 12,000 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டதா என்பதையும்;

(iii) இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்திய நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் யாவை என்பதையும்; அந்த நிறுவனங்கள் அல்லது அமைப்புகளுக்கு வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட மொத்த கொடுப்பனவுத் தொகையைக் குறிப்பிடுவாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

153/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— கடந்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புள்ள பொருளாதார நிலையத்திற்குள் வாகனங்கள் பிரவேசிக்கும் போதும் அந்நிலையத்தின் மலசலகூடங்களை பயன்படுத்தும் போதும் கட்டணங்கள் அறவிடப்படுகையில் பலதரப்பட்ட முறைகேடுகளும் நிதி மோசடிகளும் இடம்பெறுவதாக விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், தம்புள்ள பொருளாதார நிலையத்தில் நடைபெறும் இவ்வாறான முறைகேடுகளை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

189/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸ் சேவையில் உப பொலிஸ் பரிசோதகர் பதவியில் தற்போதுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கேற்ப இவர்களுக்கு பொலிஸ் பரிசோதகர் பதவி வரையிலான பதவியுயர்வுகள் எவ்வளவு காலத்திற்கு பின்னர் வழங்கப்பட வேண்டும் என்பதையும்;

(iii) இந்த உரிய காலத்தினை பூர்த்திசெய்துள்ள உப பொலிஸ் பரிசோதகர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

979/ ' 18

கௌரவ இஷாக் ரஹுமான்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் பேருந்து தரிப்பிடத்தில் பயணிகள் கூடங்களில் பெரும் குறைப்பாடு உள்ளதென்பதையும்;

(ii) மழைக் காலங்களில் பெருந்தொகையான பாடசாலை மாணவர்கள் மேற்படி பயணிகள் கூடங்களை பயன்படுத்துகின்றனர் என்பதையும்;

(iii) தற்போதுள்ள பயணிகள் கூடங்கள் உரிய தரத்தில் தயாரிக்கப்படாமையினால் சீர்குலைந்த நிலைமைக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி அத்தியவசியமான இடங்களில் பயணிகள் கூடங்களை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1004/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அனுராதபுரம் மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1191/ '18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரின் பிரத்தியேக பதவியணிக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வோர் உத்தியோத்தரதும் பெயர், பதவி, ஒதுக்கப்பட்டுள்ள வாகனத்தின் வகை, பதிவிலக்கம் மற்றும் அவ்விதம் ஒதுக்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது யார் என்பதை வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1327/ '18

கௌரவ சிசிர ஜயகொடி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய பாடசாலை ஒன்றில் 08 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கும் வேலைத்திட்டமொன்றை கல்வி அமைச்சு 2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துகிறதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் கீழ் இடமாற்றம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் அவற்றிலுள்ள அதிபர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இந்த இடமாற்றம் வழங்கல் காரணமாக தேசிய பாடசாலைக் கட்டமைப்பு முழுமையாக சீர்குலைதல் மற்றும் குறித்த பாடசாலைகளின் கல்வித் தரம் வீழ்ச்சியடையாது என்பதற்கு உத்தரவாதமளிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளுக்கு புதிய அதிபர்களை நியமிப்பதற்காக பின்பற்றப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1330/ ' 18

கௌரவ எஸ். சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் பூனகரி பிரதேச செயலாளர் பிரிவின் கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம் என்ற பெயரில் தேசிய பாடசாலையொன்று இருக்கின்றதென்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கின்ற இரண்டு தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, பதவியணி பற்றாக்குறை, மேசை கதிரை தட்டுப்பாடு மற்றும் வேறு வளக் குறைபாடுகளைக் கொண்ட பாடசாலையாக கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம் காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கிளி/முழங்காவில் மகா வித்தியாலயத்தின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா பணியாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையில் நிலவுகின்ற சிற்றூழியர் வெற்றிடத்தினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் மூலம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த முடியுமாவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இந்தப் பாடசாலையின் கட்டிடத் தேவைகள் பூர்த்திசெய்யப்படும் தினம் யாதென்பதையும்;

(ii) கதிரைகள் மற்றும் மேசைகளின் தட்டுப்பாட்டினைப் பூர்த்தி செய்யும் திகதி யாதென்பதையும்;

(iii) இப்பாடசாலையின் பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் தினம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2018 நவம்பர் 28, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

282/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சட்ட மாஅதிபர் திணைக்களத்திலுள்ள அரசாங்க சட்டவாதிகளின் எண்ணிக்கை மற்றும் அரசாங்க சட்டத்தரணிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் பொறுப்புக்களை தாமதமின்றி வினைத்திறனுடன் நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான அரசாங்க சட்டவாதிகள் மற்றும் அரசாங்க சட்டத்தரணிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

399/ '18

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தெற்கு அதிவேக வீதியின் மொத்த நீளம் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான மதிப்பீட்டுச் செலவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வீதியை நிர்மாணிக்கின்றபோது காணி மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்குவதற்குள்ள இழப்பீட்டுத் தொகை ஏற்கனவே பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், செலுத்தப்பட்டுள்ள மொத்த இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் தெற்கு அதிவேக வீதியின் மூலமாக அரசாங்கம் ஈட்டிய மொத்த வருமானம் ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டுகளில் வீதியின் திருத்த வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

761/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண கமத்தொழில் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் விவசாயப் பண்ணைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த விவசாயப் பண்ணைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) அந்த ஒவ்வொரு விவசாயப் பண்ணையிலும் பணி புரியும் தொழிலாளர்களின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) அந்த தொழிலாளர்களில் தற்போது நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) ஏனைய தொழிலாளர்களையும் நிரந்தரமாக்க அமைச்சு நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

957/ '18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையினால் மதஸ்தலங்களுக்கு சூரிய மின்வலுத் தொகுதிகளை வழங்கும் கருத்திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள மதஸ்தலங்களின் எண்ணிக்கை யாது;

(ii) ஒவ்வொரு மதஸ்தலத்திற்கும் வழங்கப்பட்டுள்ள மின்வலு முறைமையின் இயலளவை வெவ்வேறாக முன்வைப்பாரா;

(iii) 2017.06.01 ஆம் திகதியளவில் மேற்படி கருத்திட்டத்துக்காக செலவிடப்பட்டுள்ள பணத் தொகை யாது;

(iv) மேற்படி மின்வலு தொகுதிகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு யாது;

(v) மதஸ்தலங்களுக்கு சூரிய மின்வலு தொகுதிகளை இலவசமாக வழங்குவதற்கான காரணம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1138/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மே மாதம் இடம்பெற்ற திடீர் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) பாதிக்கப்பட்ட குடியிருப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஒதுக்கிய தொகை எவ்வளவென்பதையும்;

(v) இழப்பீடாக செலுத்தப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(vi) இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(vii) இற்றைவரையில் இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்படாத குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(viii) இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1157/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) இந்த ஒவ்வோர் உள்ளூராட்சி நிறுவனத்தினாலும் நிர்வகிக்கப்படுகின்ற சிறுவர் பூங்காக்களின் எண்ணிக்கை யாது;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை;

(v) 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை இந்த ஒவ்வொரு சிறுவர் பூங்காவையும் அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள வருடாந்த ஏற்பாடுகள் வெவ்வேறாக எவ்வளவு;

(vi) இந்த சிறுவர் பூங்காக்களை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சு தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகளும் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1193/ '18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரின் பிரத்தியேக பதவியணிக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வோர் உத்தியோத்தரதும் பெயர், பதவி, ஒதுக்கப்பட்டுள்ள வாகனத்தின் வகை, பதிவிலக்கம் மற்றும் அவ்விதம் ஒதுக்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது யார் என்பதை வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1345/ '18

கௌரவ நிஹால் கலப்பத்தி,— நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சேவை அவசியத்தின் அடிப்படையில் நிதிப்பிரமாணம் 71 கீழ் ஏற்படுத்தப்பட்ட மது வரி பரிசோதகர் பதவிக்குரிய சம்பளம் அமைச்சரவை தீர்மானத்துக்கமைய உற்பத்தி வரிச்சட்டத்தின் கீழ் கடமையை மேற்கொளவதற்காக ஏற்படுத்தப்பட்ட உற்பத்திவரி பரிசோதகர் பதவிக்குரிய சம்பளத்துக்கு சமனானது என்பதையும்;

(ii) அமைச்சரவை, உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதி மன்றம் என்பவற்றின் இணக்கப்பாட்டுடன் கலால் வரி பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளத்தை சுங்கவரி திணைக்களத்தில் பணியாற்றும் கலால் வரி பரிசோதகர்களுக்கும் 1992 தொடக்கம் 2006 வரை வழங்கப்பட்டதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(ஆ) (i) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி பதவிப்பெயரை மாற்றாமல் புதிய நியமனங்களை வழங்காமல் திணைக்களமொன்றிலிருந்து மற்றுமொரு திணைக்களத்துக்கு உள்ளீர்ப்பதன் மூலம் அந்தப் பதவியின் சேவைப் பிரிவு, சம்பளத் தொகுதி, சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் சம்பள அளவுத் திட்டத்தை குறைத்தல் மாற்றுதல் அல்லது வேறு ஏதேனும் பாதகத் தன்மையை ஏற்படுத்தல் தற்போதைய சட்டவிதிமுறைகளுக்கு ஏற்புடையதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அனைவரையும் சமனாக மதித்தல் என்ற கோட்பாட்டை அது மீறுகின்றது என்பதையும் ஏற்றுக்கொள்வீரா?

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல் ஏன்?

# 2018 நவம்பர் 29, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

75/ ' 18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 245 இன் படி, கொழும்பு புதிய நகர மண்டபத்திற்கு அருகில் 7000 இருக்கைகளைக் கொண்ட மாநாட்டு மண்டபமொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3000 மில்லியன் பயன்படுத்தப்பட்ட விதம் தொடர்பான விபரமான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தில் கூட்டுச்சேரும் தனியார் துறை முதலீட்டாளர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்குப் பிரதிபலிப்புக் காட்டிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பெயர் பட்டியல் ஒன்றையும் இவர்களது முதலீடுகளின் பெறுமதிகள் அடங்கிய அட்டவணை ஒன்றையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

152/ '18

கௌரவ ரோஹினி குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி கங்கையில் மணல் அகழ்வுக்காக வில்கமுவ பிரதேச செயலகத்தினால் அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நபர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி அனுமதிப்பத்திரங்கள் வழங்கியமை காரணமாக வில்கமுவ பிரதேசத்தில் மகாவலி நதிக்கு பாரிய சுற்றாடல்சார் பாதிப்பு ஏற்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அப் பாதிப்பை நிறுத்த அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

190/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாடசாலை மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள "சுரக்ஷா" காப்புறுதித் திட்டத்தின் மூலம் உள்வாங்கப்படுகின்ற நோய்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த 05 ஆண்டுகளில் மேற்படி நோய்களால் பாதிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நோயின் பிரகாரம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி காப்புறுதித் திட்டம் எத்திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதையும்;

(iv) இது வரை இக் காப்புறுத்திட்டத்தினால் அனுகூலங்களை பெற்றுக்கொண்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு மாணவரினதும் பெயர், பாடசாலை, கல்வி கற்கின்ற தரம், பீடிக்கப்பட்ட நோய் மற்றும் காப்புறுதித் தொகை ஆகியவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

283/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— தொலைத்தொடர்புகள், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை,

(i) வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு சென்றுள்ள பெண்களின் எண்ணிக்கை;

(ii) வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு சென்றுள்ள பெண்களில் தாய்மாரின் எண்ணிக்கை;

(iii) வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு சென்று பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகி இலங்கைக்கு மீள வருகைதந்துள்ள மற்றும் உயிரிழந்துள்ள பெண்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு வருட ரீதியாக தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பராயமடையாத பிள்ளைகள் உள்ள தாய்மார் வெளிநாடு செல்வதன் காரணமாக அவர்களின் பிள்ளைகளுக்கு பாதகமான தாக்கம் ஏற்படுகின்றது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பராயமடையாத பிள்ளைகள் உள்ள பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு செல்வதைத் தடுக்க அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

762/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தினால் பதுளை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்காக நிர்மாணிப்பட்ட இரண்டு மாடி மற்றும் மூன்று மாடிக் கட்டிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைகளின் பெயர், முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) இக்கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்களை பெற்றுக்கொண்ட ஆட்கள்/நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிர்மாணப் பணிகளுக்காக ஒவ்வொரு ஆளுக்கும்/நிறுவனத்திற்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தங்களை பெற்றுக்கொடுக்கும் போது மாகாண கல்வித் திணைக்களம் பின்பற்றிய முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

980/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் வாவிகளைத் தழுவியதாக நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற பெரும் தொகையான மீனவர்களுக்கு இற்றைவரை நிரந்தர வீடுகள் இல்லையென்பதை அறிவார என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வீடுகள் தொடர்பான பிரச்சினையை தீர்ப்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) இதற்கான வீடமைப்புக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1005/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மாத்தளை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியவள ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1256/ '18

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் போகஹகந்த சீவலிகந்த மற்றும் புலத்கொல்ல ஆகிய கிராமங்களுக்கு குழாய் நீர் இல்லாமையினால் அந்த கிராம மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அக்கிராம மக்களுக்கு குழாய் நீரினை வழங்குவதற்காக அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

# 2018 நவம்பர் 30, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

76/ ' 18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 246 இன் படி, இலங்கையில் சொகுசு அங்காடிகளின் சொர்க்கபுரி (Shopping Paradise) ஒன்றை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட பிரதானமான வரித் திருத்தங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வரித் திருத்தங்கள் காரணமாக ஆடைகள், பாதணிகள், இலத்திரனியல் மற்றும் மின் சாதனங்களின் விலையிலும், புரள்விலும் ஏற்பட்டுள்ள தாக்கம் எவ்வாறானது என்பதையும்;

(iii) 1994 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அந்தந்த ஆண்டில் மேற்படி சுற்றுலாப் பயணிகளிடமிருந்து ஈட்டிய வெளிநாட்டுச் செலாவணித் தொகையைக் காட்டுகின்ற அட்டவணையைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

284/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) எம்பிலிப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் உள்ள,

(i) வாட்டுக்களின் எண்ணிக்கை;

(ii) நோயாளர்களுக்கான கட்டில்களின் எண்ணிக்கை;

(iii) சத்திரசிகிச்சைக்கூடங்களின் எண்ணிக்கை;

யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாரியளவிலான பிரதேசத்தை உள்ளடக்கியதாக இந்த வைத்தியசாலையினால் சேவை வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், அதற்கு உகந்தவாறு போதியளவில் வசதிகள் இல்லை என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

550/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சரவை நியமித்த நிலையியற் பெறுகைக் குழு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்தை புறத்தொதுக்கி முதலாவது சந்தர்ப்பத்தில் நிராகரிக்கப்பட்ட கொள்கலன்களில் பொருத்தப்பட்ட 50 மின் பிறப்பாக்கிகளை நிறுவுவதற்கான இரண்டு விலைகூறுனர்களை மீண்டும் மீள்மதிப்பீடு செய்யுமாறு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை வேண்டிக்கொண்டதா என்பதையும்;

(ii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அதன் 2017.07.12 ஆந் தேதிய அறிக்கையில் Senok Trade Combine Pvt. Ltd மிகப் பொருத்தமான மற்றும் பதில் நடவடிக்கைக்குரிய ஆகக் குறைந்த விலைகூறுனர் என்று இரண்டாம் தடவையாகவும் விதந்துரைத்ததா என்பதையும்;

(iii) அமைச்சரவை அங்கீகாரத்தினூடாக அமைச்சரவை நியமித்த நிலையியற் பெறுகைக் குழு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை புறத்தொதுக்கி கேள்விப் பத்திரத்தை 2017.07.31 ஆந் திகதி இந்தியாவின் Sterling & Wilson என்ற நிறுவனத்துக்கு வழங்கியதா என்பதையும்;

(iv) சனாதிபதி செயலகத்திலுள்ள பெறுகை மேன்முறையீட்டுச் சபைக்கு Senok Trade Combine Pvt. Ltd மேன்முறையீடொன்றை செய்ததா என்பதையும்;

(v) Senok கம்பனியானது ஏற்கனவே நிறுவுவதற்கான ஆகுசெலவை அதன் கேள்விப்பத்திரத்தில் உள்ளடக்கியுள்ள அதேவேளை, நிறுவுவதற்கான பூச்சிய ஆகுசெலவைக் கருத்தில்கொண்டு Sterling & Wilson மற்றும் கொரியா நிறுவனம் ஆகியவற்றின் விலைக்கேள்வியை மீள்பரிசீலனை செய்யுமாறு அமைச்சும் பெறுகை மேன்முறையீட்டுச் சபையும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை வேண்டிக்கொண்டதற்கான காரணத்தையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

763/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— சமூக வலுவூட்டல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா;

(ii) ஆமெனில், தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்பு, இவ்வீடமைப்பு உதவி பெற்ற பதுளை மாவட்ட ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் படி வெவ்வேறாக யாவை;

(iii) எதிர்வரும் காலத்தில் இக்கருத்திட்டத்தின் கீழ் அதிக அளவிலான வீடமைப்பு உதவிகளை பதுளை மாவட்ட மக்களுக்கு வழங்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைககள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(ஆ) இன்றேல், ஏன்?

958/ '18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த தினங்களில் நிலவிய கடும் வறட்சி காரணமாக குருநாகல் மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) பாதிப்புக்குள்ளான இக்குடும்பங்கள் பற்றி அறிக்கையிடப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் வெவ்வேறாக யாவை;

(iii) வறட்சி காரணமாக பாதிப்புக்குள்ளான மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1195/ '18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரின் பிரத்தியேக பதவியணிக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வோர் உத்தியோத்தரதும் பெயர், பதவி, ஒதுக்கப்பட்டுள்ள வாகனத்தின் வகை, பதிவிலக்கம் மற்றும் அவ்விதம் ஒதுக்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது யார் என்பதை வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1268/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள தேங்காய் உற்பத்தி;

(ii) மேற்படி காலப்பகுதியில் வருடாந்தம் ஏற்றுமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணிக்கை;

(iii) மேற்படி காலப்பகுதியில் வருடாந்தம் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கடந்த காலத்தில் சீரற்ற காலநிலை காரணமாக தென்னை விளைச்சல் குறைவடைந்தமை தொடர்பில் தீர்வு வழங்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

(ii) விவசாயிகளுக்கு நிவாரண உதவி அடிப்படையில் உரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், வழங்கப்பட்ட உரத்தின் அளவு மற்றும் உரம் வழங்கப்பட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இதன் கீழ் உள்ளடங்கும் தென்னை ஏக்கர்களின் அளவு யாது என்பதையும்;

(v) இதுவரை, உர நிவாரணம் வழங்கப்படவில்லை எனின், அவை வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1331/ '18

கௌரவ சி. சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில், கரச்சி பிரதேச செயலாளர் பிரிவில் கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் எனும் பெயரில் தேசிய பாடசாலையொன்றுள்ளது என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகள் இரண்டில் ஒன்றாகிய இப்பாடசாலையில் ஆசியரியர் பற்றாக்குறை, பணியாட்டொகுதி உறுப்பினர்களின் பற்றாக்குறை, மேசை கதிரைகளின் பற்றாக்குறை மற்றும் ஏனைய வளங்களின் பற்றாக்குறையுடன் இப்பாடசாலையானது செயற்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா பணியாட்டொகுதியினரின் பெயர்கள் என்னவென்பதையும்;

(ii) இப்பாடசாலையில் நிலவும் கல்விசாரா பணியாட்டொகுதியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்காமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(iii) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னேற்ற முடியாது என்பதை ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இப்பாடசாலையின் கட்டடத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாது;

(ii) மேசை கதிரைகளின் பற்றாக்குறை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும் திகதி யாது;

(iii) இப்பாடசாலைப் பணியாட்டொகுதியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2019 சனவரி 11, வெள்ளிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 3/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல்,— 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மூலம் மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பீடமொன்றை நிர்மாணிக்க முன்மொழியப்பட்டுள்ளதோடு மேற்படி முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 4/ '18

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,— நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற குற்றச் செயல்கள் மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக சகல பிள்ளைகளுக்கும் 9 ஆம் தரம் வரை அவர்களது சமயங்களின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயப்படுத்தல் உகந்ததென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 16/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைத்தல்,— இலங்கையின் அநேகமான கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகள் மிகக் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளதால், அத்தகைய விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 21/ '18

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— இணையத் தளங்களில் ஆபாச காணொளிகள் உலாவுவதை தடுக்கும் பொருட்டு சிறப்பு நிறுவனமொன்றை தாபித்தல்,— தற்போது அதிகளவில் இணையத் தளங்கள் ஊடாக பல்வேறு ஆபாச காணொளிக் காட்சிகள் உலாவுவதன் மூலம் ஆட்களின் அந்தரங்கத்துக்கு பாதிப்பேற்படுவதோடு குறிப்பாக பெண்கள் அதன் மூலம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதால், இவ்வாறான காணொளிக் காட்சிகளை தன் வசம் வைத்துள்ள, விநியோகிக்கின்ற மற்றும் உருவாக்குகின்ற ஆட்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு பயன்மிக்க சிறப்பு பிரிவொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகின்றது.

பா. 22/ ‘18

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் சிறப்புப் பயிற்சி பெற்ற உளநல ஆலோகர்களை அல்லது போசகர்களை நியமித்தல்,— தற்போது பரவலாக காணக்கூடியதாக உள்ள இளைஞர் யுவதிகள், மாணவ மாணவியர்கள் தற்கொலை செய்து கொள்ளும் போக்கினை தடுப்பதற்கு அனைத்து அரச கல்வி நிறுவனங்களுக்கும் பயிற்சி பெற்ற உளநல ஆலோசகர்கள், போசகர்கள் நியமிப்பட வேண்டுமென அல்லது மேற்படி கல்வி நிறுவனங்களில் தற்போது பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு உளநல ஆலோசனை தொடர்பான சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகின்றது.

பா. 24/ ’18

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்துக்குரித்தாக இருந்த கரப்பந்தாட்ட விளையாட்டின் பெருமையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இற்றைக்கு ஏறத்தாழ ஒரு தசாப்தத்துக்கு முன்னர் புத்தளம் மாவட்டத்தின் பாடசாலைகளிலிருந்து உருவாகிய திறமைவாய்ந்த கரப்பந்தாட்ட விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் வெளிப்படுத்திய திறைமைகளின் காரணமாக புத்தளம் மாவட்டத்துக்கு கரப்பந்தாட்ட விளையாட்டு மூலம் பெருமையானதோர் இடம் கிடைத்திருந்த போதிலும், இன்றளவில் அந்த நிலைமையில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதனால், மீண்டும் அந்தப் பெருமையை புத்தளம் மாவட்டத்துக்கு கொண்டு வருவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 25/ ’18

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலை ஒன்றைத் தாபித்தல்,— மக்களின் போஷாக்குத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான புரதச்சத்தை பெற்றுக் கொடுக்கவும், வருடாந்தம் ரின் மீன் இறக்குமதிக்காக வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை பாதுகாத்துக் கொள்வதற்காகவும், மேலும் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்கத் தேவையான அனைத்து வளங்களும் புத்தளம் மாவட்டத்தில் இருப்பதாலும், அம்மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 26/ ’18

கௌரவ அசோக்க பிரியந்த,— கொழும்பு –கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை சிலாபம் வரை நீடித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அதிவேக நெடுஞ்சாலைகள் மிக முக்கியமானவையாக உள்ளதாலும், தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டம் மிக துரிதமாக அபிவிருத்தியடைந்து வருவதாலும், அந்த அபிவிருத்தி வேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தற்போது கொழும்பிலிருந்து கட்டுநாயக்க வரையுள்ள அதிவேக நெடுஞ்சாலை சிலாபம் வரை நீடிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா 27/ ’18

கௌரவ அசோக்க பிரியந்த,— வடமேல் மாகாணத்தில் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக மருத மர நடுகைக் கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— மண்ணில் உள்ள நீரைப் பாதுகாக்கும் ஆற்றலைப்போன்றே மண்ணரிப்பினை குறைக்கும் பண்புடைய நீண்ட ஆயுட்காலத்தைக்கொண்ட மருத மரத்தை வடமேல் மாகாணத்தின் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக நடுகைசெய்யும் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா 28/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— பத்தலங்குண்டு தீவுவாசிகளான மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டிக் குடாநாட்டுக்கு அருகில் உள்ள பிரதான தீவுகளிலொன்றான பத்தலங்குண்டு தீவைச்சேர்ந்த மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகள் இற்றைவரை முறையான கவனத்திற்கு இலக்காகவில்லை என்பதால், நிகழ்கால நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் அம்மக்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.29/ '18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கோழிப் பண்ணை உரிமையாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற *'பற்றரி கேஜ்'* முறைமையை நிறுத்துதல்,— இலங்கை பண்டைய காலந்தொட்டு உயிரினங்கள் மீது அன்பு செலுத்துகின்ற பௌத்த நாடாக விளங்கிய போதிலும், இன்றளவில் சில கோழிப் பண்ணையாளர்கள் பயன்படுத்துகின்ற *பற்றரி கேஜ்* முறைமை காரணமாக விலங்குகள் பெரும் சித்திரவதைக்குள்ளாவதனாலும், அதிக முட்டை உற்பத்தியின் மூலம் சிறிய அளவிலான கோழிப் பண்ணையாளர்களின் தொழில்கள் ஆபத்தான நிலைக்கு உள்ளாகியுள்ளதன் காரணத்தினாலும், மேற்படி மனிதாபிமானமற்ற முறைமையை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகின்றது.

பா.30/ '18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுப் பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வருடாந்தம் எமது நாட்டிற்கான பால் மா இறக்குமதிக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுவதுடன், இப்பணத்தை எமது நாட்டிற்குள்ளேயே சேமித்துக்கொள்ள முடியுமெனில் அது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் உந்துசக்தியாக அமையுமென்பதால் பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரிதமான நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 31/ '18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வடமேல் மாகாணத்திலுள்ள குருணாகல் மாவட்டம் மிகவும் பெருமைவாய்ந்த வரலாற்றிக்கு உரிமை கோரும் தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த பல இடங்களைக் கொண்டதொரு மாவட்டமாக இருப்பதுடன், பண்டைய காலத்தில் குருணாகல், தம்பதெனிய மற்றும் யாப்பகுவ போன்ற இராச்சியங்களும் இம்மாவட்டத்திலேயே அமைந்திருந்ததெனினும் தற்போது இந்த புராதன இடங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக பாரிய பிரச்சினைகள் தோன்றியுள்ளதால் மேற்படி தொல்பொருளியல் இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 32/ '18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சகல துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்றை நடைமுறைப்படுத்தல்,— எந்தவொரு நாட்டிலும் வெற்றிகரமான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று காணப்படுவது அந்த நாட்டில் வாழும் பிரசைகளுக்கு முக்கியமாகும் என்பதுடன், இலங்கையில் அரசதுறை மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்காக ஓய்வூதிய முறையொன்று அல்லது சேமலாப நிதிய முறையொன்று நடைமுறையில் இருந்த போதிலும், நாட்டில் முறைசாரா துறையிலுள்ள ஊழியர்களுக்காக அத்தகைய சமூக பாதுகாப்பு முறையொன்று நடைமுறையில் இல்லாமையால், அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 33/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்தல்,— கண்டி மாவட்டத்தை புவியியல் ரீதியில் நோக்குகையில் கடல் பிரதேசத்திலிருந்து தூரமாக அமைந்திருப்பதனால் இம்மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் புரதத் தேவையை நிறைவு செய்வதற்காக கண்டி மாவட்டத்திலுள்ள அனைத்து குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பினால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்பைக் குறைத்தல்,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பு காரணமாக சூழலுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளமையால் இந்த சூழல் பாதிப்பை குறைப்பதற்கான துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.35/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகளை அகற்றுதல்,— தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் கண்டி வைத்தியசாலையை இரண்டாவது தேசிய வைத்தியசாலையாக முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்படி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகள் அனைத்தையும் அகற்றத் துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றைத் தாபித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தகவல்கள் முக்கிய காரணிகளாக இருப்பதுடன் இவ்வாறான தகவல்களை அளிப்பதில் முக்கிய பங்காற்றி வரும் பிராந்திய ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.37/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் நீர்வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— தற்பொழுது உலகில் நீர்வாழ் தாவரங்களுக்கு பெருங் கேள்வி நிலவுவதோடு, அதன் மூலம் எமது நாட்டுக்கு பெருமளவில் அன்னிய செலாவணியை ஈட்டக்கூடிய பரந்துபட்ட வாய்ப்பு உருவாகியுள்ளதோடு, அண்மையில் ஜப்பான் நாட்டு நிபுணர்களால் தமது ஆராய்ச்சி அறிக்கையொன்றில் நீர்வாழ் தாவர வளர்ப்புக்கு புத்தளம் மாவட்டத்தின் கரையோரம் சார்ந்த பிரதேசம் மிகவும் உகந்ததெனச் சுட்டிகாட்டியுள்ள பின்னணியில் நீர் வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றை புத்தளம் மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.38/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை நிறுவுதல்,— வடமேல் மாகாணத்தில் தற்போது புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளமையினால் அந்த நோயாளிகளுக்காக வடமேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலையொன்றை நிறுவ வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 39/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலை ஒன்றைத் தாபித்தல்,— இலங்கையின் பிரதான சிறுவர் வைத்தியசாலையாகிய றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் காணப்படுகின்ற பாரிய இட நெருக்கடியைக் குறைப்பதற்காகவும் வட மேல், வட மத்திய மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்குப் பயன்தரும் வகையிலும் வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலையொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 40/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலை ஒன்றைத் தாபித்தல்,— தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தினை ஒரு சுற்றுலா வலயமாக முன்னேற்றுவதற்கு எதிர்பார்ப்பதால் இக்கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு தேவையான மனித வளத்தை பயிற்றுவிப்பதற்காக புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலையொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/ '18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் சிறுநீரக நோயாளிகளுக்காக வைத்தியசாலையொன்றை நிர்மாணித்தல்,— வடமேல் மாகாணத்தில், குருணாகலை மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்துள்ளமையால், சிறுநீரக நோயாளர்களுக்காக வடமேல் மாகாணத்தில் வைத்தியசாலையொன்றை நிர்மாணிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/ '18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் தலசீமியா நோயாளர்களுக்கென வைத்தியசாலையொன்றைத் தாபித்தல்,— அண்மைக் காலத்தில் இலங்கையில் அதிக எண்ணிக்கையான தலசீமியா நோயாளர்கள் அறிக்கையிடப்பட்டிருப்பது குருநாகல் மாவட்டத்திலாகும் என்பதுடன் இதுவரை மேற்படி நோயாளிகளுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கான தனியான வைத்தியசாலையொன்றை தாபிக்கப்படாமையினால் மேற்படி நோயாளிகளுக்கு தனியான வைத்தியசாலையொன்றை குருநாகல் மாவட்டத்தில் தாபிக்க வேண்டும் என்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.43/ '18

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— கொலொன்னாவ மாநகரசபையை நிறுவுதல்,— கொழும்பு நகரத்தையும் அண்டிய நகரங்களையும் நிர்வகிப்பதற்காக கொழும்பு, கடுவெல மற்றும் கோட்டே எனும் மூன்று மாநகரசபைகள் நிலவியபோதிலும், இந்த மூன்று மாநகரசபை ஆளுகைப் பிரதேசங்களினதும் எல்லையில் அமைந்துள்ள கொலொன்னாவ தேர்தல் தொகுதி இரண்டு நிர்வாக அலகுகளான கொலொன்னாவ நகரசபை மற்றும் கொட்டிகாவத்த – முல்லேரியாவ பிரதேச சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருவதால் ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வேறுபாடுகளைத் தோற்றுவிக்க இது காரணமாக அமைந்துள்ளதோடு சுற்றுப்புறத்தில் நிலவுகின்ற மாநகரசபைகள் நிர்வாகத்தின் வினைத்திறனின்பேரில் துரித அபிவிருத்தியை இன்றளவில் அடைந்துள்ளமையால், ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு கொலொன்னாவ நகரசபையையும் கொட்டிகாவத்த – முல்லேரியா பிரதேச சபையையும் ஒருங்கிணைத்து கொலொன்னாவ மாநகரசபை நிறுவப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.44/ '18

கௌரவ முஹம்மது நசீர்,— ஹஜ் யாத்திரைச் சட்டமொன்றை அறிமுகப்படுத்தல்,— வருடாந்தம் ஹஜ் யாத்திரையில் ஈடுபடுகின்ற பக்தர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவும், அது தொடர்பான நிருவாக அமைப்பொன்றை தாபித்து சட்ட முறையான ஏற்பாடுகளை வகுக்கவும், அரசாங்கத்தால் "ஹஜ் யாத்திரைச் சட்டமொன்று" அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.45/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஒய அபிவிருத்தி கருத்திட்டத்தின் விளைவாக பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்தில் வீடுகள், காணிகள் உள்ளிட்ட சொத்துக்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— உமா ஒய அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக நிலக்கீழ் சுரங்கங்கள் அகழப்படுவதால் பண்டாவளை, லியன்கஹவெல பிரதேசத்திலுள்ள மக்கள் தங்களது வீடுகளையும் காணிகளையும் இழந்து தற்போது மூன்று வருட காலம் கடந்துள்ள நிலையில், இடம்பெயர்ந்துள்ள இம்மக்களுக்கு இற்றைவரை எவ்வித இழப்பீட்டுத் தொகையோ அல்லது வேறு நிவாரணமோ கிடைக்கவில்லை என்பதால் இம்மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/'18

கௌரவ ஹேஷா விதானகே,— புகையிரதம் மூலம் காய்கறிகளை எடுத்துச்செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பித்தல்,— பதுளை மாவட்டம் உள்ளிட்ட காய்கறி உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களிலிருந்து காய்கறி உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை குறைந்த செலவிலும் விரயத்தினை இயன்றளவு குறைக்கும் வகையிலும் புகையிரதம் மூலமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு எடுத்து செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 47/18

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக நீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக தற்போது ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 8394 குடும்பங்கள் நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதனால் அந்த மக்களுக்கான நீர் வசதியை வழங்குவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை நடமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 48/18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்தல்,— இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான விகாரைகள் காணப்படுவதும், அதிகபடியான பிக்குமார் வசிப்பதும், கூடுதலான பௌத்தர்கள் வாழ்வதும் மற்றும் அதிகளவான சாசன பாதுகாப்பு அதிகார மன்றங்கள் நடைமுறையில் உள்ளதுமான வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

பா. 49/'18

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்பிட்டி சார்ந்த பிரதேசங்களில் பனைக் கைத்தொழிலை ஊக்குவித்தல்,— வட மேல் மாகாணத்தின் கல்பிட்டி பிரதேசத்தில் பனை சார்ந்த கைத்தொழில் கடந்த சில வருடங்களாக பெரும் சரிவை சந்தித்துள்ளதால், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளின் பிரகாரம், எதிர்காலத்தில் கல்பிட்டி பிரதேசத்தை சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்திற்கு நேர் ஒத்ததாக அப்பிரதேசத்தில் பனைக் கைத்தொழிலை ஊக்குவிக்கும் வேலைத்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.51/ '18

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் பெருவாரியாகப் பரவும் நோய்களைத் தடுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் வெள்ளப்பெருக்குக்குப் பின்னர் அனர்த்தத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் நீர் வடிந்தோடியதன் பின்னர், எலிக்காய்ச்சல், வயிற்றோட்டம் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக குறிப்பிட்ட பிரதேசங்களில் பொது சுகாதார பரிசோதகர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதனால், அத்தகைய பெருவாரியாகப் பரவும் நோய் நிலைமை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.52/ '18

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து உச்ச பயன் பெறுதல்,— ஒரு விவசாய நாடான எமது நாட்டின் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து விவசாய கைத்தொழிலுக்கு பாரிய சேவையாற்றப்படுகின்ற போதிலும், இந்த ஆற்று நீர் பாரியளவு பயன்படுத்தப்படாது கடலுடன் கலப்பதாக அறிவியல்சார் ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால், மகா பராக்கிரமபாகு மன்னனுடைய காலத்தைப் போன்று இந்த நீர் வளத்தைக் கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு உச்ச பயன் பெறக்கூடியவாறு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.53/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக தொடர்ச்சியாக வெள்ளப்பெருக்கினால் அனர்த்தத்துக்கு உட்படும் இரத்தினபுரி மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.54/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்குத் தனித்துவமான மரபுரிமைகளைப் பாதுகாத்தல்,— கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சப்ரகமுவாவுக்கு உரித்தான தனித்துவமிக்க பண்புகள் காணப்படுவதுடன், இன்று வர்த்தகமயமாக்கல் காரணமாக மேற்படி தனித்துவமிக்க பண்புகள் அழிவடைகின்ற அச்சுறுத்தல் காணப்படுவதனால் எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்கு தனித்துவமிக்க மரபுரிமைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.55/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற அச்சுறுத்தலைக் கொண்ட பல இடங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் மேற்படி நிலைமைகளை குறைப்பதற்காக ஏதேனுமொரு நிகழ்ச்சித்திட்டத்தை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.56/ '18

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்தல்,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டுக்கு திறமையைக் கொண்டுள்ள பெரும் எண்ணிக்கையானோர் இருப்பதனால் மேற்படி ஆட்களை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டுசெல்லக் கூடியவகையில் கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.